**பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறும் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நம்பிக்கை பொறுப்பின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப்பொறுப்பு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நம்பிக்கைப்பொறுப்பை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நம்பிக்கைப்பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப்பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நம்பிக்கைப்பொறுப்பின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நம்பிக்கைப்பொறுப்பின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நம்பிக்கைப்பொறுப்பின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,ஐ

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் பந்தி இலக்கம் 48 இன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள விடையங்கள் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்ய முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 232,791 வாடகை கடன்பட்டோரில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதி கடன்பட்டோர் மீதி மற்றும் முன்கொண்டு செல்லப்பட்ட வாடகை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். 2023 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முன்கொண்டுவரப்பட்ட வாடகையை ஈடு செய்யாமல் முற்பெறுவனவாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 1,347,223 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் ரூபா 139,942 ஆன அலுவலக உபரணங்கள் என்பவற்றின் பெறுமதி முன்னைய ஆண்டின் போது முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து ஒன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு ஆண்டின் அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியின் இறுதி திகதியின் போது மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நம்பிக்கை பொறுப்பினால் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் முழுமையாக பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. | அலுவலக உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்தல் பிரயோக ரீதியில் இல்லாதிருந்தமையால் அந்த விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 17 இன் பிரகாரம் ஒவ்வொரு வருமான மூலங்கள் தொடர்பாக தனித்தனியாக பேரேட்டு கணக்கு பேணிச் செல்லப்படாதிருந்தமையால் ரூபா 144,197,265 ஆன 08 வருமான மூலங்களை உள்ளடக்கிய நம்பிக்கை பொறுப்பின் ஒவ்வொரு வருமான மீதியினதும் சரியான தன்மையை பரீட்சிப்பதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது. | கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். காண்பிக்கப்பட்டுள்ள 08 வருமான மூலங்களுக்காக தனித்தனியாக பேரேட்டு கணக்குகள் தயாரித்து பேரேடு சரி செய்யப்பட்டுள்ளது. | ஒவ்வொரு வருமான மூலங்கள் தொடர்பாகவும் தனித்தனியாக பேரேட்டு கணக்கு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு கணிப்பிடல், அது பயன்பாட்டுக்கு எடுப்பதற்காக தயார் நிலைக்கு கொண்டு வரப்பட்டபின் பெறுமானத் தேய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் நம்பிக்கை பொறுப்பின் சகல சொத்துக்களுக்காகவும் பெறுமானத் தேய்வு கொள்கையாக ஒவ்வொரு ஆண்டின் சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான சொத்துக்களின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கட்டிடத்தை அபிவிருத்தி செய்தல் ஆதனங்கள் பொறிகள் விடயங்களுக்காக ஆண்டில் ரூபா 7,671,757 சேர்த்தல்கள் உடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட மீதியின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் பொறுமானத் தேய்வு கொள்கை மற்றும் பெறுமானத் தேய்வு கணிப்பிடல் நியமத்தின் தேவைகளுக்கு இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு அடிப்படை வருடாந்த கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நேர்கோட்டு முறையின் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது. | சொத்தொன்றை பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் பெறுமானத் தேய்வு கணப்பீடுகள் ஆரம்பிக்க வேண்டியிருந்ததுடன் பெறுமானத் தேய்வு கொள்கையின் பிரகாரம் பெறுமானத் தேய்வு கணிப்பிடல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலக்கம் 89738653 என்ற ரூபா 29,592,973 ஆன நிலையான வைப்பிற்காக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 320,253 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் கிடைக்க வேண்டிய சரியான வட்டி ரூபா 1,339,426 ஆனமையால் மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,019,173 குறைவாகவும் நட்டம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். வட்டி சதவீதம் எழுதுவினைஞரின் தவறினால் குறைவாக பதியப்பட்டமையால் இது ஏற்பட்டிருந்ததுடன், 2023 இன் கணக்குகள் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் சீராங்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான வாய்ப்புக்களுக்கு உரிய வட்டி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குறுங்கால நிலையான வாய்ப்பு இலக்கம் 87978159, 87978188 மற்றும் 87978207 தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிககூற்றுக்களின் பிரகாரம் கிடைக்கப்பெற்ற வட்டி முறையை ரூபா 129,459 தொகை ரூபா 4,592,973 மற்றும் ரூபா 959,969 ஆக இருந்த போதிலும் நிலையான வட்டி புதுப்பித்தல் அறிவித்தலின் பிரகாரம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற வட்டி முறையே ரூபா 61,877 தொகை, ரூபா 3,414,959 மற்றும் ரூபா 195,584 ஆனமையால் ரூபா 2,009,981 வட்டி குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். 2022.01.01 ஆம் திகதி முதல் இந்த தற்காலிக நிலையான வாய்ப்புகள் அவ்வப்போது முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் முழுமையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டள்ள தொகை சரியானதாகும். | நிலையான வைப்பினை புதுப்பிக்கும் அறிவுத்தலில் காண்பிக்கப்படுகின்ற வட்டி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2011 ஆம் ஆண்டில் இருந்து நம்பிக்கை பொறுப்பின் வங்கி கணக்கிற்கு நேரடியாக கிடைத்த கூட்டுமொத்தமாக ரூபா 5,642,410 மீதி இனங்காணாப்படாத பெறுவனவாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக கடன்பட்டோரிடம் இருந்து குறைத்து காண்பிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் அப்பெறுமானத்தால் குறைவடைந்திருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். 2023 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத பெறுவனவுகள் ஈடு செய்யப்படாமல் இணங்காணப்படாத பெறுவனவாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். இந்த மீதி தாமதம் இன்றி இணம் கண்டு கணக்குகள் மூடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய செலுத்த வேண்டிய பாதுகாப்பு செலவினமான ரூபா 1,406,833 தொகை கணக்கிலிருந்து தவறவிடப்பட்டமையினால் மீளாய்வாண்டின் பாதுகாப்பு சேவை செலவினம் மற்றும் நடைமுறை பொறுப்புகள் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஆண்டின் நட்டமும் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். 2023 இன் கணக்குகள் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்களின் கீழ் சரி செய்யப்படும். | மீளாய்வாண்டிற்குரிய பாதுகாப்பு செலவினம் சரியாக கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | கிரயம் ரூபா 1,054,400 பெறுமதியான சீசீரீவி உபகரணம் | செயலிழந்து அகற்றப்பட்ட பெறுமானத் தேய்வுசெய்யப்பட்ட துணைப்பாகங்கள் | பயன்படுத்தப்படாத கழற்றி அகற்றப்பட்ட சீசீரீவி உபகரணங்களை |

| | | | |
|---|---|---|---|
| | செலவிழந்தமையால் கழற்றி அகற்றப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்ட போதிலும், அதனை கைதவிர்த்து புத்தகங்களின் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கைதவிர்க்கப்பட்டதன் பின்னர் இந்த பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | புத்தகங்களில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,436,130 பெறுமதியான வாகன தரிப்பிட கட்டுப்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படுகின்ற மென்பொருள் முறைமைக்காக மீளாய்வாண்டிற்குரிய 20 சதவீதமான ரூபா 287,226 பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படாமையினால் ஆண்டின் நட்டமும் அப்பெறுமானத்தால் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் மூலம் சரிசெய்யப்படும். | பெறுமானத் தேய்வு சரியாக கணப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் ஆண்டின் ஆரம்பத்தின் போதும் இறுதியின் போதும் கையில் உள்ள காசாக காண்பிக்கப்படுகின்ற ரூபா 22,623 மீதி பௌதீக ரீதியில் காணப்படுகின்ற மீதியாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022 சனவரி 01 ஆம் திகதியிலும் இந்த மீதி 22,623 ஆக இருந்தது. வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சல் அல்லது காசு வெளிபாய்ச்சல் இடம் பெறாமையினால் காசுப்பாய்ச்சல் கூற்றில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த மீதியில் தாக்கம் ஏற்படவில்லை. | இந்த மீதியை சரியாக இனங்கண்டு கணக்கிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பெறுமதி | வேறுபாடு (குறைவு)/ அதிகரிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பெறவேண்டிய கடை வாடகை வருமானம் | 9,395,660 | 11,450,099 | 2,054,439 | பேரேடு சரியானதாகும். பேரேட்டின் | மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளுக் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கூட்டுத்தொகை காலப் பகுப்பாய்வின் இறுதி கூட்டத்தொகையுடன் சமனாகும். வாடகை வருமானத்தில் முன்னைய ஆண்டில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இணக்கம் செய்யப்பட்டுள்ளது. | கான காரணங்களை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாகனங்களை தரித்து வைப்பதற்காக இலங்கை மீன்பிடி கூட்டுத் தாபனத்திலிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 17,402,781 | 6,480,459 | 10,922,322 | நம்பிக்கை பொறுப்புத் தகவல்களின் பிரகாரம் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய மீதி நம்பிக்கை பொறுப்பின் தகவல்களின் பிரகாரம் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் இருந்து அளவிட வேண்டிய மீதி ரூபா 17,402,781 ஆகும். எதிர்காலத்தில் இது தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நம்பிக்கை பொறுப்பின் அலுவலகத்தை நவீன மயப்படுத்துவதற்கு உரிய ஒப்பந்தத்துக்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு செலுத்த வேண்டிய மீதி | 6,964,161 | 10,427,586 | 3,463,425 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். CECB நிறுவனத்திற்கு பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட அளவு மாத்திரமே செலுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் செலுத்துவதற்கு பரிந்துரை | மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை கண்டறிந்து சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | செய்யப்பட்ட அளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஈ) | காணி | 382,429,934 | 375,141,765 | 7,288,169 | பேரேடு சரியானதாகும். கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன் செலவினங்களை சீராக்கும் போது எழுதுவினைஞரின் வழுக்களினால் காணிகளின் சேர்த்தல்களின் காரணமாக இது ஏற்பட்டுள்ளது. இறுதி மீதியில் தாக்கம் ஏற்படவில்லை. | நிதி கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கைகளுக்கு இடையே பெறுமதிகளை ஒப்பிட்டு வேறுபாட்டுக்கான காரணங்களை பரீட்சித்து சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | கட்டிட அபிவிருத்தி | 113,749,963 | 106,078,206 | 7,671,757 | பேரேடு சரியானதாகும். கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன் செலவினங்களை சீராக்கும் போது எழுதுவினைஞரின் வழுக்களினால் காணிகளின் சேர்த்தல்களின் காரணமாக இது ஏற்பட்டுள்ளது. இறுதி மீதியில் தாக்கம் ஏற்படவில்லை. | நிதி கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கைகளுக்கு இடையே பெறுமதிகளை ஒப்பிட்டு வேறுபாட்டுக்கான காரணங்களை பரீட்சித்து சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிலுவை கடை வாடகை | 81,141,044 | நிலுவை கடை வாடகை பெயர் பதிவேடு/ பேரேட்டு கணக்குகள் | ஒவ்வொரு கடைகளுக்காகவும் தனித்தனியாக கோவைகள் பேணிச் செல்லப்படுகின்றது. | ஒவ்வொரு கடைகளுக்காகவும் கடை வாடகை பதிவேடு மற்றும் பேரேட்டு கணக்குகள் பணி செல்லப்படல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வேண்டும். |
| (ஆ) | இடர் கடன் | 87,352 | பேரேட்டு கணக்குகள் | சம்பள சீட்டுக்களை பரீட்சித்தல் இந்த எந்த நிறுவனத்தின் சரியான தன்மை உறுதிப்படுத்த முடியும். அறவீடுகள் தொடர்பான தகவல்கள் கோரப்படுமாயின் வழங்க முடியும். | இடர் கடன் தொடர்பாக பேரேட்டு கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுத்தி வைத்தல்கள் | 28,670,857 | பேரேட்டு கணக்கு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். பேரேட்டு கணக்குகளை சரியாக நாளது வரையாக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பேரேட்டு கணக்குகள் சரியாக நாளாவது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளச் செலுத்த வேண்டிய வைப்புகள் | 5,500,000 | மீதியின் இருப்பு மற்றும் சரியான தன்மை உறுதிப்படுத்தும் ஆவணம் | இந்த தொகை அரசாங்கத்தின் வருமான கணக்கில் இடுவதற்கு 59 வது முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு கூட்டத்தின் போது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், அது எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படும். | காசு பெறுவனவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | ஆண்டின் இறுதி பெறுமானத் தேய்வு பெற வேண்டிய வட்டி போன்றவற்றை 05 கணக்குகளுக்குரிய சீராக்கம் | 80,138,884 | நாட்குறிப்பு பதிவுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவுகளில் சரியாக தயாரிக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நாட்குறிப்புக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ரூபா 81,141,044 ஆன கடன்பட்டோருக்காக நம்பிக்கை பொறுப்பினால் அறவிட முடியாக்கடன் ஒதுக்கப்படாது | அறவிட முடியாக் கடனை ஒதுக்குவதற்காக இந்த கடன்பட்டோர் தொடர்பாக சரியாக ஆய்வு செய்யப்பட | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன், |

| | | |
|---|---|---|
| இருந்ததுடன், கடன்பட்டோரிடம் இருந்து ரூபா 55,152,854 அதாவது கடன்பட்டோரிடமிருந்து 68 சதவீத அளவு 03 வருடங்களுக்கு விஞ்சிய கடன்பட்டோர் ஆகும். | வேண்டும். இது தொடர்பான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான கடன்பட்டோருக்காக அறவிட முடியாக்க கடன் ஒதுக்கம் செய்யப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பந்தி 12.2.1 | அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் பதிற்கடமை பார்ப்பதற்காக அல்லது பதவி ஒன்றின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அல்லது நியமிக்கப்படுவது அந்தப் பதவி அரசாங்கத்தின் உத்தியோகத்தர் தற்போது ஆற்றுகின்ற பதவியினை விட உயர் தரத்தின் பதவி ஒன்று அல்லது சமமான தரத்தின் பதவி ஒன்றாக இருக்குமாயின் மாத்திரமாக இருந்த போதிலும், தமது நிரந்தர பதவிக்கு கீழ் உள்ள இரண்டு பதவிகள் நம்பிக்கைப் பொறுப்பின் கணக்காளர் மற்றும் முகாமையாளர் பதவிகளில் பதிற்கடமை ஆற்றுவதற்காக கடற்றொழில் அமைச்சின் பிரதான கணக்காளர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்த நியமனத்திற்கான படியாக 2016 பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 4,017,403 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சந்தை தொகுதியின் சகல பதவிகளுக்காகவும் நியமன அதிகாரி பேலியகொடை மத்திய மின் சந்தை கட்டிடத்தொகுதியின் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பாக இருந்ததுடன் அந்த பொறுப்பின் அந்த நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரத்தின் பிரகாரம் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பதவி ஒன்றில் பதிற் கடமைக்காக நியமிக்கும் போது அந்த உத்தியோகத்தர் தற்போது ஆற்றுகின்ற பதவியை விட உயர்ந்த அல்லது சமமான மட்டத்தின் பதவி ஒன்றாக இருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 137 | பிரமாணத்துக்கு முரணாக உத்தியோகத்தரின் அங்கீகாரம் இன்றி நம்பிக்கை பொறுப்பில் தலைவர், முகாமையாளர் மற்றும் கணக்காளர் போன்ற பதவிகளுக்காக மீளாய்வாண்டின் போது 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,140,000 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவுகள் நிதிப் பிரமாணத்தின் 35 அதிகாரத்தை கையளித்ததன் பிரகாரம் அதற்குரிய அதிகாரத்தில் கொடுப்பனவுகள் அங்கீகரித்த உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியான அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 225(2) | மேலதிக நேரத்திற்காக உரித்தான பொது 35(அ) உறுதிச் சீட்டுக்குப் பதிலாக நம்பிக்கை பொறுப்பின் உறுதிச் சீட்டின் மூலம் மீளாய்வாண்டின் மேலதிக நேர படியாக ரூபா 6,290,612 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதியின் மேலதிக நேரப் படி இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி படிவத்தின் பிரகாரமே செலுத்தப்படுகின்றது. | மேலலதிக நேரத்திற்காக பொது மாதிரி படிவம் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 502(2) | நிலையான சொத்து பதிவேடொன்று பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டுக்காக பொருள் மெய்மெய்யாய்வும் மேற்கொள்ளப்படாமையினால் ரூபா 2,341,721,086 நிலையான சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நம்பிக்கை பொறுப்பின் மூலம் நிலையான சொத்து பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படுகின்றது. கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களையும் கவனத்தில் கொண்டு அந்த பதிவோட்டை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலையான சொத்து பதிவேட்டை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன், அந்த சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 01/2020 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அரசாங்க நிதி | நிதியத்தை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணம் இருக்குமாயின் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் அந்த நிதியம் சட்டரீதியாக்கப்பட வேண்டிய போதிலும், இந்த கணக்காய்வு | நிதியத்தின் சட்டத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்காக வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளது. | பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிதியத்தை சட்ட ரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 876(2)(அ) | அறிக்கை திகதி வரையிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நம்பிக்கை பொறுப்பு உரித்து உறுதி | | | |
| (i) | பிரிவு 6(அ)(i) | நம்பிக்கை பொறுப்பின் சகல சேமிப்புக்களின் மிகை நிதியம் திறைசேரி உண்டியல்கள், அரசாங்கத்தின் சேமிப்பு பத்திரங்கள் தவிர ஏனைய ஏதாவது முறையொன்றில் முதலீடு செய்வதற்கு திறைசேரியின் முன் எழுத்து மூல இணக்கப்பாடு பெறவேண்டியிருந்த போதிலும், அவ்வாறான இனக்கப்பாடு இன்றி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பினால் நம்பிக்கை பொறுப்பு சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் கூட்டுமொத்தமாக ரூபா 284,724,181 தொகை இலங்கை வங்கியிலும், சேமிப்பு வங்கியிலும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பில் நிலையான வாய்ப்புகளில் நிதியினை நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், நம்பிக்கை பொறுப்பாளருக்கு கிடைக்கின்ற விசேட அதிகாரத்தின் கீழ் அது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உடன்படிக்கைக்கு முரணாக முதலீடுகளை மேற்கொள்ளும் போது திறைசேரியின் முன் எழுத்து மூலம் இணக்கப்பாடு பெறப்படல் வேண்டும். |
| (ii) | பிரிவு 7(அ) | அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரிடம் இருந்து பெறப்படுகின்ற மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கப்படுகின்ற வாடகையொன்று மொத்த வியாபாரிகளிடமிருந்தும், சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் விற்பனை கடைகளுக்காக அறவிட வேண்டியிருந்த போதிலும் தற்போது | வாடகை பணத்தை திருத்துவதற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்தில் இருந்து வாடகை மதிப்பீடு கோரப்பட்டுள்ளதுடன் அது கிடைத்த பின்னர் தேவையான அங்கீகாரத்தை பெற்று மிகுதி நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் விற்பனை கடைகளில் வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவிடப்படுகின்ற ரூபா 40,000 மற்றும் ரூபா 10,000 ஆன வியாபார கடைகளின் வாடகை அந்த நியதிகளுக்கு முரணாக முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 12 வருடங்கள் கடந்திருந்த போதும் அந்த வாடகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | பிரிவு 7(இ) | வியாபார கட்டிடத் தொகுதியில் மீன்களை கையாளுதல் சுகாதாரரீதியில் மேற்கொள்வதற்கு வியாபாரம் செய்யப்படுகின்ற மீன் உணவு சுகாதார மற்றும் தரத்தன்மையுடன் குறித்துரைத்த நியமத்தில் பேணிச் செல்லப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும், அதற்கான தேவையான வழிகாட்டி அல்லது சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்படாது இருந்ததுடன், அதனால் அந்த செயற்பாடுகளை பரீட்சைப்பதற்கான திட்ட முறைமை ஒன்றை இனங்காண முடியாதிருந்தது. | சந்தைத் தொகுதியில் சுகாதார ரீதியாக மீன்கள் கையாளுதல் தொடர்பாக தேவையான அறிவுறுத்தல் மீன்பிடி திணைக்களம், பேலியகொடை நகர சபை, சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம், நாரா நிறுவனம் போன்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக நகர சபை மற்றும் நாரா நிறுவனத்தின் மூலம் தெரிவு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. | சுகாதார பாதுகாப்புடன் மீன்கள் கையாளுவதற்காக வழிகாட்டி அல்லது விதிகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (iv) | பிரிவு 7(உ) | நம்பிக்கை பொறுப்புக்குரிய இருப்புகள் மொத்த விற்பனை கடைகள் 154 மற்றும் 128 சில்லறை வியாபார கடைகள் என்பவற்றை வாடகைக்கு வழங்குவதற்காக நம்பிக்கை பொறுப்பினால் | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | விற்பனை கடைகளை வெளிப்படையாக வாடகைக்கு வழங்குவதற்காக எழுத்து அளவுகோல்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட எழுத்து மூல அளவுகோல்கள் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அளவுகோல்கள் தயாரிக்கப்படாமல் வெளிப்படை இன்றி 2011 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையும் வாடகைக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது | | |
| (v) | பிரிவு 7(கா) | நம்பிக்கை பொறுப்பின் ஆதனங்களை பாதுகாப்பதற்காக வழங்கு தொடர்வதற்கோ அல்லது வழக்கு நடவடிக்கைகளின் போது பிரதிவாதியாக முன்வருவதற்கோ முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்ட 282 வியாபார கடைகளுக்காக ரூபா 81,141,044 நிலுவை பணத்தை அறவிடுவதற்காக வழக்கு தொடர்வதற்கு போதியளவான சான்றுகள் நிறுவனத்தில் வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அந்த நிலுவை பணத்தை அறவிடுவதற்காக வழங்கு தொடர முடியாதிருந்ததுடன், அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாகவும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த கடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன், வழக்கு தொடர்வதாயின் அதற்குரிய உடன்படிக்கை போன்றவற்றை கண்டறிதல் வசதியீனமாக காணப்பட்டது. எனினும், தற்போது இவ்வாறான நிலைமை ஏற்படுவதை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட வழிகாட்டியினாலேனும் நடவடிக்கை எடுத்து நிலுவை வியாபார கடைகளின் வாடகையை அறவிடல் வேண்டும். பொறுப்பு வாய்ந்த நம்பிக்கை பொறுப்பின் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (vi) | பிரிவு 8(அ) | நம்பிக்கைப் பொறுப்பாளரின் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தேவையான எந்தவொரு தடவையிலும் நம்பிக்கை பொறுப்பாளரின் கூட்டங்கள் நடாத்தப்பட முடியும். அதன் பிரகாரம் 02 மாதங்களுக்கு ஒரு தடவை இந்த கூட்டம் நடத்த வேண்டியிருந்த போதும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட கூட்டத் தடவைகளின் எண்ணிக்கை 02 ஆகும். அதன் பிரகாரம் ஆகக் குறைந்த கூட்ட | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த சந்தர்ப்ப சிக்கலான நிலைமைகள் மற்றும் எரிபொருள் பிரச்சினைகளின் காரணமாக உரிய பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது அதனை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை | ஆகக் குறைந்தது 02 மாதங்களுக்கு ஒரு தடவை நம்பிக்கை பொறுப்பாளர்களின் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தடவைகள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,851,060 பற்றாக்குறையாக இருந்துடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 29,620,704 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,769,644 பற்றாக்குறையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பற்றாக்குறைவின் குறைவிற்கு வருமானம் ரூபா 24,584,909 இனால் அதிகரித்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 935,387 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நம்பிக்கை பொறுப்பின் பதவி அணியினர் அங்கீகரித்து 06 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், நம்பிக்கை பொறுப்பின் முகாமையாளர், கணக்காளர் மற்றும் உலக ஆய்வாளர் என்ற பதவிகளுக்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பதற்கான நடைமுறைகள் அங்கீகரித்து ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் பதவி அணியினரை அங்கீகரித்து அதன் ஒரு பகுதிக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மிகுதி ஊழியர் தரப்பினரையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்து அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 மார்ச் 08 ஆம் திகதி நடைபெற்ற 57 ஆவது நம்பிக்கை பொறுப்பு சபை கூட்டத்தின் போது நம்பிக்கை பொறுப்பு சபை பத்திர இலக்கம் 2022/BM/410 இன் மூலம் பேலியகொடை மத்திய மீன் சந்தை தொகுதியின் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்காக 06 அங்கத்தவர்களை உடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான நிறுவனம் கட்டுப்பாட்டு தொடர்பான | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமை மற்றும் எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக இந்த கூட்டங்களை நடாத்துவதில் வசதியீனமாக இருந்தது. எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களை நியமித்தல் மற்றும் கூட்டங்களை நடாத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டி 4.2(எ) இன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஆகக் குறைந்த 03 மாதங்களுக்கு ஒரு தடவை கூடவேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நம்பிக்கை பொறுப்பின் கணக்காய்வு குழு அந்த வழிகாட்டியை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2022 செப்டம்பர் 01 ஆம் திகதிய நம்பிக்கை பொறுப்பு பத்திர இலக்கம் 2022/BM/418 இன் மூலம் பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதியின் வெள்ளை இருப்பு கை வண்டிகள் சேவை நடாத்திச் செல்லப்படுகின்றமையினால் செலுத்த வேண்டிய மாதாந்த சேவைக் கட்டணமாக கூட்டுமொத்தமாக ரூபா 512,500 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமையினால் அவர்களிடம் இருந்து சேவையை பெற்றுக் கொள்ளுதல் முடிவுறுத்தப்பட்டு அந்த சேவையை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்காக உரிய திட்ட முறைமையொன்று தயாரிக்குமாறு தீர்மானிக்கப்பட்ட போதிலும், 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் முகாமைத்துவத்தால் அந்த சேவையை முடிவுறுத்துவதற்கோ அல்லது உரிய திட்டமொன்றோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கைவண்டி சேவை தொடர்பாக எழுந்த பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் எதிர்காலத்தில் அது முறைமைப்படுத்தப்படும். | வெள்ளை இரும்பு கைவண்டி சேவையை பேணிச் செல்வதற்காக திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஐஸ் கட்டிகளை வழங்கும் ஒப்பந்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பொது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.1 இன் பிரகாரம் தேசிய போட்டியாளர் கேள்வி வழங்கல் முறைமை பயன்படுத்த வேண்டியிருந்த போதும், 2021 மே மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2022 ஏப்ரல் மாதம் 30 வரையான ஒரு வருட காலத்திற்காக வரையறுக்கப்பட்ட கூறு விலை கோருவதன் மூலம் ஐஸ் கட்டிகள் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். | பெறுகைகள் முறைமை தீர்மானத்தில் பெறப்படுகின்ற நம்பிக்கை பொறுப்பில் வாடகை வருமானமாக இருந்ததுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய பெறுகைகள் கேள்வி கோருவதன் மூலம் பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கூறுவிலை சமர்ப்பித்த 03 கம்பனிகள் ஒரே முகவரியில் இருந்த ஒரே பணிப்பாளர் சபை மற்றும் ஒரே பங்குதாரர்களுடன் 03 நிறுவனங்களாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இந்த 08 நிறுவனங்களும் தகவல்கள் இணையதளம் ஊடாக கண்டறியப்பட்டதுடன், அதன் போது அந்த நிறுவனங்களுக்கு தனித் தனியாக முகவரி காண்பிக்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட ஒரே முகவரி அல்லாமல் இணைய தளத்தில் பெறப்பட்ட முகவரிகள் ஆகும். அவ்வாறே அந்த நிறுவனங்களுக்குரிய தனித் தனியான வியாபார பதிவு சான்றிதழ் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் போது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவினால் சரியாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | கேள்வி கோரப்படாமல் 2022 மார்ச் 01 ஆம் திகதி துண்டு ஐஸ் கட்டிகள் வழங்கும் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இந்த சேவை பழைய விலையில் அந்த நிறுவனத்திற்கு கேள்வி கோராமல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டிக்கு முரணாக 2022 மே 01 ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு மீண்டும் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டிருந்தது. | மிகுதி பெறுகைகள் நடவடிக்கைகளின் போது இந்த நிலைமை தொடர்பாக கவனத்தில் கொண்டு சகல கேள்வி தாரர்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புதிய கேள்வி கோரலின் மூலம் உரிய ஒப்பந்தம் கையளிக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 128 கடைகளை உடைய சில்லறை வியாபார கட்டிட தொகுதியில் 64 கடைகளில் இருந்து 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 9,625,540 செலவினம் மொத்த விற்பனை கடையாக மாற்றப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 வரையிலும் அந்த கட்டிடத்தொகுதியில் 35 சில்லறைக் கடைகள் மற்றும் மாற்றஞ்செய்யப்பட்ட 09 மொத்த விற்பனை கடைகள் என்பவற்றை விற்பனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | விற்பனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாத கடைகள் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |